19th March 1965]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அரசாங்கத்துக்கு இதைப் பற்றி எழுதி அனுப்பினால் அதை நாங்கள் பரிசீலிக்கிறோம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தக் கட்டடங்கள் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. எந்த ஆண்டுகளில் முடிவடைந்தன, எவ்வளவு நேரம் ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன். எந்தெந்த ஊர்களில் இவைகள் கட்டப்பட்டன என்றும் அறியலாமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஓமந்தூர், நல்லூர், வெள்ளிமேடு பட்டி, தும்பூர்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இம்மாதிரி தமிழ் நாட்டிலே நிறையப் பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டு இடிந்து விழக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இனியாவது அமைச்சர் அவர்கள் சரியான முறையைப் பயன்படுத்தி காண்ட்ராக்ட் வேலை நடப்பதில் உஷாராக இருப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கெனவே இப்போது உள்ள சமுதாய நலத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து யூனியனே காண்ட்ராக்ட் விட்டுக் கட்டுவதில் "டிபெக்டுகள்" பல வந்ததால், டெண்டர் விட்டு நல்ல முறையிலே செய்யவேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர் அறிவார் என்று நினைக்கிறேன்.

"சேரி" என்னும் பெயரை "புரம்" என்று மாற்றுவதற்கான இசைவு

* 280 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : } திரு. இராம. அரங்கண்ணல் : } கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :—

(அ) "சேரி" என்ற பெயரை மாற்றி "புரம்" என்று அழைக்கலாம் என்று சென்னை மாநகராட்சிக்கு இம்மாநில அரசு சம்மதம் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், தமிழ் நாட்டிலுள்ள மற்ற இடங்களிலும் இப் பெயர் மாற்றம் அமுலாக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) சென்னை மாநகரில் சில தெருக்களின் பெயர்களில் வரும் "சேரி" என்ற சொல்லை "நகர்" என்று மாற்ற மாநகராட்சி மன்றம் உத்தேசித்தது. "சேரி" என்ற சொல்லை "நகர்" என்று மாற்றுவதைவிட, அத்தகைய தெருக்களின் பெயர்களிலிருந்து "சேரி" என்ற சொல்லையே நீக்கிவிடலாமென மாநகராட்சி மன்றத்திற்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. மாநகராட்சி மன்றமும் அதை ஏற்றுக்கொண்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் கா. கோவிந்தன் : ஒரு குறிப்பிட்ட இனத்தவர் வாழ்கின்ற இடம் சேரி என்றோ, நகர் என்றோ, காலனி என்றோ சொன்னால் தனி மக்கள் வாழ்கின்ற இடம் என்று தெரிகிறது. இப்படி பிரித்து வாழ்கின்ற நிலை இல்லாமல், தெருக்களுக்குப் பெயர் வைக்கிறாற்போல இவைகளுக்கும் பெயர் வைக்க வழிவகை சர்க்கார் செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கெனவே இருந்த பெயருக்கு வேறு பெயர் வைப்பது தான் பிரச்னை. புதிதாக வருவதற்கு பெயர் வைப்பது பற்றி ஆலோசனை இல்லை.

சென்னை நகருக்கான பெருநகரத் திட்டம்

* 281 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னை மேயர் அண்மையில் சென்னை நகரத்திற்கான பெரு நகரத் திட்டம் ஒன்று அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளாரா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?